(இ) இவற்றிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிக்க கூட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(ஈ) எப்போது இந்த நிலையங்கள் அமைப்புப் பணி முடிந்து இயங்க இருக்கின்றன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் :

(அ) திண்டுக்கல் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது 67 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இயங்குகின்றன.

(ஆ) புதியதாக 75 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

(இ) 35 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான நில எடுப்பு வேலைகள் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதியுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான நில எடுப்பு வேலைகள் மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களிடம் நிலுவையில் உள்ளது.

(ஈ) 39 தோல் பதனிடு தொழிற்சாலைகளுக்கான வேலைகள் ஏப்ரல் 1993-ல் முடிந்துவிடுமென கணக்கிடப்பட்டுள்ளது. மீதியுள்ள 36 தோல் பதனிடு தொழிற்சாலைகளுக்கு அரசு அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டு .... (குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஸ்பெஷல் மென்ஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று நீங்கள் பேசுகிறீர்கள்; இன்று பேசலாம். (குறுக்கீடு) நீங்கள் விதி 56-லே கொடுத்தது பற்றிக் கேட்பது போலவே, இதைப்

1993 மார்ச் 19]

பற்றி உரிமையாகக் கேட்கக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் என்னிடத்திலே ஒரு பிரச்சினையைப் பற்றிச் சொன்ன போது, இதையெல்லாம் நீங்கள் பேசுகிறபோது பேசலாம் என்று என்னுடைய அறையிலே சொல்லி அனுப்பியிருக் கிறேன். நீங்கள் அதை இங்கே வந்து கேட்பது முறை யல்ல. (குறுக்கீடு) நீங்கள் கேட்டதற்கு நான அறையி லேயே உங்களுக்கு விளக்கம் சொல்லியிருக்கிறேன். (குறுக் கீடு).

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் கொடுத்து இருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்த அறிவிப்புக்கு நான் பதில் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய பதில் பெற்ற பிறகு அதுபற்றி இங்கே வந்து எழுப்பக்கூடாது. (குறுக் கீடு)

3. சிறப்புக் குறிப்பு

ரம்சான் பண்டிகையையொட்டி, கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்குதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் தண்டாயுதபாணி, பொன்னுசாமி, ஆர். சிங்காரம், சி. ஞானசேகரன், கே. செல்வராஜ் ஆகியோர் ரம்சான் பண்டிகையைப் பொறுத்தமட்டில் கைத்தறித் துணிகளுக்கு வழங்குகிற தள்ளுபடி நிறுத்தப்பட்டு இருப்பதைப் போல ஒரு தகவல் தெரிவித்து, அதை அவையில் எழுப்ப வேண்டுமென்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து கிடைத்த விளக்கத் தின்படி அவ்வாறு, நீங்கள் சொல்வதைப் போல, ரம்சான் பண்டிகைக்கு இருந்த தள்ளுபடி ரத்து செய்யப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் எந்தத் தகவலும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தண்டாயுத பாணி அவர்கள் அதுபற்றிய சிறு விளக்கத்தைக் கேட்க லாம்; அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல் வார்கள்.